சீக்கிரம் ஓடி வாங்க...!

'ரோட்டுல வாகனம் எதுவும் இல்ல. சீக்கிரம் வேகமாக ஓடி வாங்க...!. இப்படி அன்ன நடை நடந்தால் ஏதாவது சுற்றுலா வாகனங்கள் வந்து மோதி விட போகுது என்று முன்னால் செல்லும் காட்டு யானை, மற்ற யானைகளுக்கு அழைப்பு விடுக்கிறதோ..!

(காட்சி கண்ட இடம்: வால்பாறை சோலையாறு அணை செல்லும் பெரியகடை பகுதி சாலை).

அடுப்பை பற்ற வைக்காமலேயே சமைப்பது போல் உள்ளது

குறுவை தொகுப்பு-மும்முனை மின்சாரம் ஏமாற்றும் திட்டம்

த.வெ.க. அரசுக்கு தி.மு.க. கண்டனம்

சென்னை, ஜூன்.13- டெல்டா விவசாயிகளுக்கு அறிவித்துள்ள குறுவைதொகுப்புமற்றும் மும்முனை மின்சாரம் ஏமாற்றும் திட்டம் என்று த.வெ.க. அரசுக்கு தி.மு.க. விவசாய அணிகண்டனம் தெரிவித்துள்ளது.

கண்டனம்

இதுகுறித்து தி.மு.க. விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் விவசாய புரட்சியை ஏற்படுத்திய தி.மு.க. ஆட்சியில் ஆண்டு தோறும் ஜூன் 12-ந் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, விவசாயத்தை மேம்படுத்திய அந்த நடைமுறையை கூட இந்த நீர்மேலாண்மையிலும் அனுபவமில்லாத அரசு கடைபிடிக்கமுடியாமல்தோற்றுப்போயிருக்கிறது. இந்த நிலையில், வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் அறிவித்த திராவிட மாடல் அரசின் பிதாமகர் தலைவர் மு.க.ஸ்டாலினின் வேளாண்மைதிட்டங்களை போல அல்லாமல், தற்போது வெற்று அறிவிப்பாக ரீல்ஸ் மாடல் அரசு வெளியீட்டிருக்கும்டெல்டா விவசாயிகளுக்கு குறுவை தொகுப்பு மற்றும் மும்முனை மின்சார அறிவிப்பு என்பது அடுப்பை பற்றவைக்காமலேயே சமைப்பது போல உள்ளது என தி.மு.கவிவசாய அணி கண்டனம் செய்கிறது.

எப்படி சாத்தியம்?

வேளாண் வளர்ச்சியை நாட்டிலேயே உயர்ந்த மாநில மாக தமிழ்நாட்டை உயர்த்திக்காட்டியது திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் அரசு ஒரு முனை மின்சாரத்துக்கே வழியில்லை, மும்முனை மின்சாரம் எப்படி சாத்தியம்? விவசாய கடன் தள்ளுபடி என்றுஏமாற்றியதைபோல குறுவைதொகுப்பும்ஏமாற்றும் திட்டம்தான். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மேகதாது அணை விவகாரத்தில்

மாநில உரிமையை கண்டிப்பாக விட்டு கொடுக்க மாட்டோம்

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேட்டி

திருவண்ணாமலை, ஜூன்.13- திருவண்ணாமலையில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா நிருபர்களிடம் கூறியதாவது:- மேகதாது அணை விவகாரம் குறித்து முதல்-அமைச்சர் தலைமையில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு உள்ளது. இருமாநில விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைத்து அனைத்து விவசாயிகளும் சந்தோஷமாக இருக்க வேண்டும். அதில் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. உச்சநீதிமன்றம் இதற்கு முன்பு பல்வேறு தீர்ப்புகளை கொடுத்து உள்ளது. அப்படி இருக்கும் நிலையில் அணை கட்டப்படும் என்று கூறுவது உச்சநீதிமன்றத்தின் முடிவுகளுக்கு மாற்று கருத்தாக இருக்கும். சட்டரீதியான பணிகளை முதல்-அமைச்சர் செய்து வருகிறார். நமக்கு வறட்சி காலத்தில் கர்நாடக எல்லையில் இருந்து தண்ணீர் வரவே வராது. டெல்டா விவசாயிகள் மிகவும் கடினப்பட்டு ஒவ்வொரு நாளும் வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். கண்டிப்பாக மாநில உரிமையை முதல்-அமைச்சரும், நாங்களும் கண்டிப்பாக விட்டு கொடுக்க மாட்டோம். நம்முடைய குரல் சட்டரீதியாக இருக்கும். அதனால் நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

மேகதாது அணை திட்டத்துக்கு விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டும்

பிரதமர் மோடியிடம் கர்நாடக முதல்-மந்திரி வலியுறுத்தல்

புதுடெல்லி, ஜூன்.13- மேகதாது அணை திட்டத்துக்கு விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டும் என கர்நாடகமுதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் பிரதமரை வலியுறுத்தி உள்ளார். அதைப் போல மத்திய நீர்வளத் துறை மந்திரியிடமும் மனு கொடுத்தார்.

பிரதமரிடம் கோரிக்கை மனு

டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கர்நாடகத்தின் புதியமுதல்-மந்திரி டி.கே.சிவக்குமாரும் பங்கேற்றார். அப்போது பிரதமர் மோடியை அவர் தனியாக சந்தித்து பேசினார். அப்போது கர்நாடகத்தின் வளர்ச்சிப்பணிகள் தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் அளித்தார். அந்த மனுவில் கர்நாடகத்தின் நிதி மற்றும் நீர்வளம் தொடர்பான கோரிக்கைகள் இடம்பெற்று இருந்தன. குறிப்பாக காவிரியின் குறுக்கே கட்டப்பட இருக்கும் மேகதாது அணை பற்றிய கோரிக்கை இடம்பெற்று இருந்தது.

விரைந்து ஒப்புதல்

இதுதொடர்பாக அந்த மனுவில் "இந்த திட்டம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனு நிராகரிக்கப்பட்டு விட்டது. எனவே, இனி இதில் முடிவு எடுக்கும் பொறுப்பு மத்திய அரசிடமே உள்ளது. அதாவது காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் மத்திய நீர் ஆணையம் ஆகியவற்றுக்கு உள்ளது. எனவே விரைந்து ஒப்புதல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கூறியுள்ளார். மேலும் 2023-2024-ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் அப்பர் பத்ரா திட்டத்துக்காக அறிவிக்கப்பட்ட ரூ.5,300 கோடி மத்திய நிதிஉதவியை விரைவாக விடுவிக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு திட்டங்கள் குறித்தும் கோரிக்கை விடுத்தார்.

நீர்வளத்துறை மந்திரி

இந்த நிலையில் நேற்று டி.கே.சிவக்குமார் மத்திய நீர்வளத்துறை மந்திரி சி.ஆர்.பாட்டீலை அவரது இல்லத்தில் சந்தித்து மேகதாது அணை திட்டத்தை வலியுறுத்தினார். இதுபோல மற்ற நீர்த்திட்டங்களையும் செயல்படுத்த கோரினார். இதனை அவரது 'எக்ஸ்' தள பக்கத்தில் அவர் குறிப்பிட்டு இருந்தார். அந்த பதிவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

மத்திய நீர்வளத்துறை மந்திரியை சந்தித்து, கர்நாடகம் தொடர்பான பல முக்கிய நீர்வளத்திட்டங்கள் மற்றும் நிலுவையில் உள்ள முன்மொழிவுகள் குறித்து ஒரு விரிவான மனுவைச் சமர்ப்பித்தேன். மேகதாது அணை திட்டத்துக்கு விரைவான ஒப்புதல் உள்ளிட்ட முக்கிய முன்னெடுப்புகளுக்கும், மத்திய அரசின் முன்நிலுவையில் உள்ள பிற முன்மொழிவுகளுக்கும் அனுமதிகளை விரைவுபடுத்துமாறு மத்திய அரசை நான் வலியுறுத்தினேன்.

அரசின் சரியான நேரத்திலான ஆதரவையும், சாதகமான பரிசீலனையையும் நான் எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழில் நம்பர் 1 நாளிதழ்
தினத்தந்தி
வழங்கும்

ஞாயிறு மலர்
மண் இல்லா விவசாயத்தில் சாதிக்கும் பெண்!

குடும்பமலர்
அன்பு-ஈகோ:உறவுக்குள் ஏற்படுத்தும் மாற்றங்கள்

தேவதை
கலை முதல் கணினி வரை...

ரூ.10 ஆயிரம் பரிசுப் போட்டி
8 பக்க வண்ண இணைப்பு
நாளை 14-6-2026 (ஞாயிற்றுக்கிழமை)
தினத்தந்தி இதழுடன் வெளிவருகிறது
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
திட்ட அலுவலகம், சிப்காட் தொழிற்பூங்கா, பனப்பாக்கம், ராணிப்பேட்டை மாவட்டம் - 631052
CIN U74999TN1971SGC005967

(டெண்டர் மற்றும் ஏலம் இணையவழி மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.என்ஐடி. 02/தி அ/பணபா/2026-27 நாள்: 12.06.2026

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) சார்பில், ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள சிப்காட் நிலப்பகுதியில் (ஞ்சிய நிலம்) மரங்களை வெட்டுதல், வேரோடு அகற்றுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக, இணையவழி வாயிலாக மட்டும் டெண்டர் மற்றும் ஏலம் கோரப்படுகிறது. பின்வரும் அட்டவணையின்படி, இணையவழியில் டெண்டர் ஆவணங்கள் பெறப்பட்டு, அதனைத் தொடர்ந்து இணையவழி ஏலம் (e-auction) நடத்தப்படும்.

பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு	முன் வைப்புத் தொகை
ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம், சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள சிப்காட் நிலத்தில் (மிஞ்சிய நிலம்) மரங்களை வெட்டுதல், வேரோடு அகற்றுதல் மற்றும் அப்புறப்படுத்துவதற்கான பணி.	ரூ.94.47 இலட்சம் (GST 18% இல்லாமல்)	ரூ.58,000/-*

*முன் வைப்பு தொகையை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும் (https://tntenders.gov.in) அல்லது eBG வாயிலாகவோ இணையதளத்தில் செலுத்தலாம் (இணைப்பு-II இல் சான்றளிக்கப்பட்ட வங்கிகளின் பட்டியலின்படி).

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணையதளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி. https://tntenders.gov.in

செ.ம.தொ.இ./2059/ஒப்பந்தப்புள்ளி/2026 திட்ட அலுவலர்

தமிழ்நாடு அரசு
பொது (சட்ட அலுவலர்கள்)த் துறை
தலைமைச்செயலகம், சென்னை-9.

அறிவிக்கை எண்.01/2026, நாள் 12.06.2026

அறிவிப்பு

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளை சட்ட அலுவலர்கள் (நியமனம்) விதிகள், 2017, விதி 5(3)-இன் படி, 140 அறிவிக்கப்பட்ட சட்ட அலுவலர்கள் காலி பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப தகுதியான வழக்குரைஞர்களிடமிருந்து இணைய வழியாக மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் "www.lawofficerscivil.tn.gov.in" என்ற இணைய முகப்பில் 13.06.2026 முதல் விண்ணப்பிக்கலாம். இதற்கான விரிவான அறிவிப்பு, விதிகள் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மேற்கண்ட இணைய முகப்பில் கிடைக்கப்பெறும். மேலும் இவ்வறிவிப்பு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வழக்குரைஞர்கள் சங்கங்களின் அறிவிப்பு பலகைகளில் ஒட்டப்படுவதோடு, அவற்றின் அதிகாரப்பூர்வ இணையதளங்களிலும் (இருப்பின்) வெளியிடப்படும்.

இணைய முகப்பு வழியாக விண்ணப்பிக்க கடைசி நாள் 29.06.2026 (மாலை 5.45 வரை)

அரசு முதன்மைச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை-9

செமெதொஇ/527/வரைகலை/2026

அருள்மிகு அங்காளம்மன் பிளேக் மாரியம்மன் திருக்கோயில்
இராமநாதபுரம், கோவை தெற்கு வட்டம், கோவை மாவட்டம்.
பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விபரம்

	பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உரிம இனம்	பூ, பூமாலை தேங்காய், பழம் மற்றும் பூஜை பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம்.
	ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படும் நாள் மற்றும் நேரம்	13.06.2026 முதல் 29.06.2026 மாலை 03.00 வரை
1	ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கும் கடைசி தேதி	29.06.2026 மாலை 04.00 மணி வரை
2	பொது ஏலம் நடைபெறும் நாள்/நேரம்	29.06.2026 மாலை 04.30 மணி
4	ஒப்பந்தப்புள்ளி திறப்பு / பொது ஏலம் நடைபெறும் இடம்	அருள்மிகு அங்காளம்மன் பிளேக் மாரியம்மன் திருக்கோயில், இராமநாதபுரம், கோவை.

இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இடம்: இராமநாதபுரம்
நாள் : 12.06.2026

செயல் அலுவலர்

வெ.ஆ.எண்.212/2026/செ.ம.தொ.அ./கோவை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்
முதுநிலைப் பட்டயப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை

ஓராண்டு (2026 - 2027) மற்றும் ஈராண்டு (2026-2028) கால முழுநேர முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் விவரம்	காலம்	மாணவர் எண்ணிக்கை	கல்வித் தகுதி	பயிற்று மொழி	தேர்ந்தெடுக்கும் முறை	தேர்வு நேரம்
1.	தொல்லியல் முதுநிலைப் பட்டயப் படிப்பு	2 வருடம்	20	ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் முதுநிலைப்பட்டம்	தமிழ் மற்றும் ஆங்கிலம்	கீழ்க்காணும் பாடங்களில் இருந்து 100 பல்கொள்குறி வினாக்கள் (Multiple Choice Questions) கொண்ட எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். தமிழ் இலக்கியம், வரலாறு, தொல்லியல், அண்மைக்கால தொல்லியல் அகழாய்வுகள் (தமிழ்நாடு (ம) இந்தியா), கல்வெட்டியல், கட்டடக்கலை, சிற்பக்கலை, நாணயவியல், அருங்காட்சியகவியல், வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.	முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை
2.	கல்வெட்டியல் முதுநிலைப் பட்டயப் படிப்பு	2 வருடம்	10	தமிழ் / இந்திய வரலாறு / வரலாறு / பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் / வரலாறு மற்றும் தொல்லியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் முதுநிலைப்பட்டம்	தமிழ் மற்றும் ஆங்கிலம்		
3.	மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியல் முதுநிலைப் பட்டயப் படிப்பு	2 வருடம்	10	இளங்கலை கட்டடப் பொறியியல் அல்லது மானுடவியல் / சமூகவியல் / வேதியியல் / இயற்பியல் / உயிரியல் / நிலவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் முதுநிலைப்பட்டம்	தமிழ் மற்றும் ஆங்கிலம்		
4.	சுவடியியல் முதுநிலைப் பட்டயப் படிப்பு	1 வருடம்	08	முதுகலையில் தமிழ்	தமிழ்	கீழ்க்காணும் பாடங்களில் இருந்து 100 பல்கொள்குறி வினாக்கள் (Multiple Choice Questions) கொண்ட எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சுவடியியல்	பிற்பகல் 2.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை

பயிலுதவித் தொகை : ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் ரூ.8,000/- (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

எழுத்துத் தேர்வு நாள் : 19.07.2026 (ஞாயிற்றுக்கிழமை), எழுத்துத் தேர்வு மையங்கள்: சென்னை, விழுப்புரம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை.

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வலைதளத்தின் மூலமாகவும் மின்னஞ்சல் வாயிலாகவும் நேரடியாகவும் பெறலாம்.

வலைதள முகவரி: www.tnarch.gov.in மின்னஞ்சல் முகவரி: tniam2026@gmail.com

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை கல்விச்சான்றிதழ்கள் மற்றும் சாதிச்சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களுடன் இணைத்து ஆணையர் (மு.கூ.பொ), தொல்லியல் துறை, தமிழ் வளர்ச்சி வளாகம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை-600 008 என்ற முகவரிக்கு அனுப்பவும். தொலைபேசி எண்: 044-2819 0023.

விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 08.07.2026 மாலை 5.00 மணி வரை.

செ.ம.தொ.இ./525/வரைகலை/2026

மின்-ஏல விற்பனை அறிவிப்பு

FORM No.22 [See Regulation 37(1)]

இந்திய அரசு, நிதி அமைச்சகம்
கடன் மீட்பு தீர்ப்பாயம்
மீட்பு அதிகாரி அலுவலகம்
2வது & 3வது தளம், ஐவான்ஸ் பவன், எண்.27 -பயணியர் விடுதி ரோடு, கோயம்புத்தூர்-641 018.
போன் : 0422-2309008, 2305030. மின்னஞ்சல் : ro1drtcobtor-dfs@nic.in

Recovery proceedings (R.P) No.142/2020 in DRC No.642/2019 in OA No.310/2016
படிவம் எண்.13
(1993 ம் வருடத்திய கடன் மீட்பு மற்றும் நொடிப்பு நிலைச் சட்டம் மற்றும் 1961 ம் வருடத்திய வருமான வரித்துறை சட்டம் இரண்டாம் அட்டவணை விதி 38 மற்றும் 52(2) ன் கீழ் விற்பனை அறிவிப்பு)

முன்னாள் ஓரியண்டல் பேங்க் ஆஃப் காமர்ஸ், ஆர்.எஸ்.புரம் கிளை, தற்போது கோயம்புத்தூர், ARM கிளை, பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் ஒருங்கிணைக்கப்பட்டது
... சான்றிதழ் உடைமையாளர்
-எதிர்-
திரு.K.ஸ்டாலின் மற்றும் மற்றொருவர் ... சான்றிதழ் கடனாளர்கள்

பெறுநர் :
1. திரு.K.ஸ்டாலின், 8A, ஆல்வின் நகர், சுங்கம் பை-பாஸ் ரோடு, ராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641 045.
2. செல்வி.S.கார்த்திகா, 8A, ஆல்வின் நகர், சுங்கம் பை-பாஸ் ரோடு, ராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641 045.

1	கடன் மீட்பு சான்றிதழ் தொகை	ரூ.42,75,649/- (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்) 30.06.2020 தேதி அன்று மற்றும் பொருந்தும் பின்வட்டி மற்றும் செலவுகளுடன்.
2	16.07.2026 தேதி வரையிலான செலுத்த வேண்டியுள்ள தொகை	ரூ.60,36,745/- (ரூபாய் அறுபது லட்சத்து முப்பத்து ஆறாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஐந்து மட்டும்) 16.07.2026 தேதி வரை, மற்றும் பொருந்தும் பின்வட்டி, பிற செலவுகளுடன், தொகை செலுத்தும் காலம் வரை.

முன்னாள் ஓரியண்டல் பேங்க் ஆஃப் காமர்ஸ், ஆர்.எஸ்.புரம் கிளை தற்போது கோயம்புத்தூர், ARM கிளை, பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் திரு.K.ஸ்டாலின் மற்றும் மற்றொருவர் ஆகியோர் இடையிலான வழக்கில் 1993ம் வருட கடன் மீட்பு மற்றும் நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 19(22)ன் கீழ் கோயம்புத்தூர், கடன் மீட்புத் தீர்ப்பாயம் மாண்பமை தலைமை அலுவலரால் R.P.142/2020 மூலமாக OA எண்.310/2016ன் மீட்புச் சான்று வழங்கப்பட்டது. அச்சான்றினை நிறைவேற்றுவதற்காக கீழே கையொப்பமிட்டவருக்கு அனுப்பப்பட்டது.

3. கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலர் மீட்பு சான்றிதழின் நிறைவுக்கேற்ப இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் இனங்களின் விற்பனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

சொத்தின் கூட்டு உரிமையாளராக உள்ள தவணை தவறியவர்களது மற்றும் பிற கூட்டு உரிமையாளர்களின் சொத்தின் வருவாய் அல்லது வருவாயின் பங்கு ஏதேனும் / அவர்களது பெயர்களும் அவர்களது உடைமையான / விற்கப்படும் சொத்தின் விபரங்கள்.

குவியல் எண். ஒன்று

சொத்து விபரம் :
கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, சர்க்கார்சாமக்குளம் கிராம க.ச.எண்.48/1ல் உள்ள **எல்லைகளும், அளவுகளும் வருமாறு :** பெருமாள்சாமியின் வீடு மற்றும் காலி மனைக்குத் தெற்கு. சின்ன அங்கப்ப முதலியாரின் வீடு மற்றும் காலி மனைக்கு வடக்கு, முத்துசாமியின் வீடு, 4" அகல வழித்தடம் மற்றும் ராமாத்தாளின் வீட்டுக்கு மேற்கு, சின்ன அங்கப்ப முதலியார் மற்றும் பெருமாள்சாமிக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் காலி மனைக்குக் கிழக்கு. இதன் **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் 19 அடி, கிழமேல் தென்புறம் 23 அடி, தென்வடல் மேல்புறம் 42 அடி, தென்வடல் கிழபுறம் 44 அடி. ஆக உள்ள 903 சதுர அடி அல்லது 2 சென்ட் 31 சதுர அடி நிலமும், 695 சதுர அடி விஸ்தீரண கட்டிடம் மற்றும் அதன் அனைத்து பிற இணைப்புகள், பயன்பாட்டுரிமைகள் மற்றும் தடவழி உபயோக உரிமைகள் சேர்ந்த சொத்து. கதவு எண்.12/25A2, 12/25A3 மற்றும் 12/26A1.

வில்லங்கச் சான்றிதழ் விபரம் : 1. வில்லங்கச் சான்று தேதி 24.10.2025 ன்படி, 01.10.2012 முதல் 17.10.2025 வரைக்குமானதில் வில்லங்கம் எதுவுமில்லை என்பது புலனாகிறது.
2. வில்லங்கச் சான்று தேதி 19.06.2025 ன்படி, 01.06.2012 முதல் 19.06.2020 வரைக்குமானதில் வில்லங்கம் எதுவுமில்லை என்பது புலனாகிறது.
3. வில்லங்கச் சான்று தேதி 19.06.2025 ன்படி, 19.06.2020 முதல் 18.06.2025 வரைக்குமானதில் வில்லங்கம் எதுவுமில்லை என்பது புலனாகிறது.

மேலும் தமிழ்நாடு, பதிவுத் துறைத் தலைவர் அவர்களது கடித எண்.21343/C1/2021 நாள் 10.07.2021ன்படி எந்த ஒரு சிவில் நீதிமன்றம் அல்லது பிற ஆணைக்குழுக்களின் இணைப்பு ஆணை (attachment) நடப்பிலிருப்பினும், சார் பதிவாளர் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் விற்பனை செய்யப்பட்ட சொத்திற்கான விற்பனைச் சான்றிதழை, கடன் வசூல் மற்றும் நொடிப்பு நிலைச்சட்டம் 1993ன் பிரிவு S.31Bயின் படி பதிவு செய்ய மறுக்க முடியாது.

சொத்தின் மீதான உரிமை கோரல் மற்றும் சொத்து குறித்து அறியப்படும் பிற விவரங்கள் அதன் தன்மை மற்றும் மதிப்பு	மீட்பு அதிகாரியின் அலுவலகத்தில் உரிமைகோரல் எதுவும் நிலுவையில் இல்லை. அல்லது பிற உரிமை கோரல்கள் தெரியவரவில்லை. ஏலதாரர்கள் தங்களது சுய விசாரணையை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
சொத்தின் மீதான பிற வில்லங்க விபரம்	பார்வையிடலுக்கென அட்டவணைச் சொத்துக்களின் வில்லங்கச் சான்றிதழ் வங்கியின் நோடல் அதிகாரி வசம் உள்ளது

குறைந்தபட்ச நிர்ணயவிலை (இதற்கும் குறைவான தொகைக்கு சொத்து விற்பனை செய்யப்படமாட்டாது)	ரூ.33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சம் மட்டும்)
குறைந்தபட்ச வைப்புத்தொகை	ரூ.3,30,000/- (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்)
ஏலத்தின் உயர்வு மடங்கு	ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

மின்-ஏல விபரம்

1	ஏலக் குறிப்பீட்டினை ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசித் தேதி	15.07.2026 அன்று மாலை 4.00 மணி அல்லது அதற்கு முன்னதாக
2	மின்-ஏலத் தேதி மற்றும் நேரம்	16.07.2026. காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை. விற்பனை முடிவு செய்யப்படும் வரை தன்னிச்சையான 5 நிமிட நீட்டிப்புடன்.
3	ஏலதாரர்கள் சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	01.07.2026 அன்று, வங்கியின் நோடல் அதிகாரியின் முன் அனுமதியுடன்.
4	ஏலத்திற்கான விலைக் குறிப்பீட்டுப் படிவத்தை பதிவேற்றம் செய்ய மற்றும் விரிவான நிபந்தனை விபரங்களுக்கான இணையதளம் "https://baanknet.com"	
5	மின்-ஏலம் குறித்து மற்றும் விற்பனைக்குள்ள அசையாச் சொத்தினைப் பற்றிய மேலும் விபரங்கள் அறிய, தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரம் பெற்ற அலுவலரின் பெயர் மற்றும் தொலைபேசி எண். திரு.M.மகேஷ்குமார், முதன்மை மேலாளர், கோயம்புத்தூர், கடன் மீட்புநிர்வாகக் கிளை, பஞ்சாப் நேஷனல் வங்கி, மொபைல் எண். 9963993409, மின்னஞ்சல் : mmkumar@pnb.bank.in	
6	RTGS/NEFT மூலமாக EMD செலுத்த, வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண். விபரம் : குறைந்தபட்ச வைப்புத் தொகையை (EMD) 'வாலட் பேங்க் அஸ்செட் ஆக்ஷன் நெட்வொர்க்' (BAANKNET) https://baanknet.com ல் 15.07.2026 அன்று மாலை 4.00 மணி வரை செலுத்தலாம். அதன் பின்னர் செலுத்தப்படும் குறைந்தபட்ச வைப்புத் தொகை மின் ஏலத்தில் கலந்து கொள்ள பரிசீலிக்கப்படமாட்டாது.	
7	அதிகபட்ச தொகைக்கு தேர்வானவர், தொகை செலுத்தும் விபரம் : மின்-ஏலம் முடிவுற்ற பின்னர், வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை உறுதி செய்யப்பட்ட தொகையில் குறைந்தபட்ச வைப்புத் தொகை கழித்து 25% தொகையை 'வாலட் பேங்க் அஸ்செட் ஆக்ஷன் நெட்வொர்க்' (BAANKNET) https://baanknet.com ல் 24 மணி நேரத்திற்குள், அடுத்த வங்கி வேலை நாளில் மாலை 4.00 மணிக்கு மிகாது RTGS/NEFT மூலமாக பாரத ஸ்டேட் பாங்கு, ரேஸ்கோர்ஸ் ரோடு கிளை, கோயம்புத்தூர். கணக்கு எண்.10065290881, மீட்பு அதிகாரி, கடன் மீட்பு தீர்ப்பாயம் பெயரில் (IFSC கோடு SBIN0007940) செலுத்திவிட வேண்டும். மீதமுள்ள 75% விற்பனைத் தொகையை சொத்து விற்பனை செய்யப்பட்ட நாள் தவிர்த்து அடுத்த 15 நாட்களுக்குள், அல்லது 15ஆம் நாள் ஞாயிறாகவோ, வேறு விடுமுறை நாளாகவோ இருப்பின் அதற்கடுத்த முதல் அலுவலக வேலை நாளில் குறிப்பிட்ட முறையிலேயே செலுத்திவிட வேண்டும். இத்துடன் சொத்தை வாங்கும் அவர், கோயம்புத்தூர், கடன் மீட்பு தீர்ப்பாயம், மீட்பு அதிகாரிக்கு 2 சதம் பவுன்டேஜ் கட்டணம் ரூ.1,000/- ஆகும் வரையும், 1 சதம் அதற்கு மேல் உள்ள அனைத்து நிர்ணயத் தொகைக்குமாகச் சேர்த்து பதிவாளர், கடன் மீட்பு தீர்ப்பாயம், கோயம்புத்தூர் என்ற முகவரிக்கு எடுக்கப்பட்ட வங்கி வரைவாக ஏல தினத்திலிருந்து 15 நாட்களுக்குள்ளாகச் செலுத்திவிட வேண்டும்.	

இந்த ஏலமானது 1993ம் வருட கடன் மீட்பு மற்றும் நொடிப்பு நிலைச் சட்டம் பிரிவு 25 முதல் 29 வரை மற்றும் 1961ம் வருடத்திய வருமான வரித்துறை சட்டம் இரண்டாம் அட்டவணை மேலும் 1962 ம் வருட ITCP விதிகளின் கீழ் நடைபெறும்.

1. இந்த ஏல விற்பனை மின்-ஏல ஆன்லைன் https://baanknet.com போர்டல் வழியாக நடைபெறும்.
2. விருப்பமுள்ள ஏலதாரர்கள் / வாங்குவோர்கள் தங்களது கைபேசி எண் மற்றும் மின்அஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி https://baanknet.com என்ற வலைதள மேடையில் பதிவு செய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் தேவையான வாடிக்கையாளர் விவர ஆவணங்களையும் பதிவேற்றம் செய்யவேண்டும். அவ்வாறு பதிவேற்றப்பட்ட வாடிக்கையாளர் விவர (